| | | | |
|---|---|---|---|
| Headline | Malaysia seeks World Heritage status for three more sites, says Nazri | | |
| MediaTitle | Tamil Nesan | | |
| Date | 10 Jul 2017 | Color | Full Color |
| Section | News | Circulation | 35,000 |
| Page No | 6 | Readership | 125,000 |
| Language | Tamil | ArticleSize | 60 cm² |
| Journalist | NULL | AdValue | RM 305 |
| Frequency | Daily | PR Value | RM 916 |



# மூன்று இடங்களுக்குப் பாரம்பரிய அங்கீகாரத்தை மலேசியா கோரும்

**லெங்கோங், ஜூலை 10 -** நாட்டின் மேலும் முக்கிய மூன்று இடங்களுக்கான பாரம்பரிய அங்கீகாரத்தை யுனெஸ்கோவிடமிருந்து கோரப்படும் என சுற்றுலா மற்றும் கலாசார அமைச்சர் டத்தோஸ்ரீ முகமட் நஸ்ரி அப்துல் அஸிஸ் குறிப்பிட்டுள்ளார்.



கிரிக்கில் உள்ள அரச பெலும் மாநிலப் பூங்கா, கோம்பாக்கில் உள்ள குவார்ட்ஸ் ரிட்ஜ் எனும் பாறைத் தலம், மற்றும் சிலாங்கூரில் அமைந்திருக்கும் இயற்கை வளம் நிறைந்த மலேசிய காட்டுவளக் கழகம் ஆகியவையே அவையாகும்.

மேற்கண்ட மூன்று இடங்களுக்கான விவரங்களை யுனெஸ்கோவிடம் சமர்ப்பித்துள்ளதாகவும் அதன் முழுமையான அறிக்கை பின்னர் அனுப்பி வைக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

2017ஆம் ஆண்டு பெலும் விழாவைத் தொடக்கி வைத்து உரையாற்றும்போது நஸ்ரி மேற்கண்ட செய்தியைத் தெரிவித்தார். அவரின் உரையை அமைச்சின் தலைமைச் செயலாளர் அப்துல் காபார் ஏ தம்பி வாசித்தளித்தார்.

லெங்கோங் பள்ளத்தாக்கு, சரவாக்கிலுள்ள மூலு தேசியப் பூங்கா, சபாவில் உள்ள கினபாலு பூங்கா, மலாக்காவிலும் ஜோர்ஜ் டவுனிலும் உள்ள வரலாற்றுப் பூர்வ இடங்களுக்கும் யுனெஸ்கோ பாரம்பரியத் தள அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

லெங்கோங் பள்ளத்தாக்கு வரலாற்றுக்கு முந்தைய அம்சங்களைக் கொண்டிருப்பதாலும் அதில் அக்காலத்திய மனித எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டதாலும் அது பாரம்பரியத் தள அந்தஸ்தை 2012 ஜூன் 30இல் பெற்றது.

கலாசாரப் பிரிவில் வாங்காங் திருவிழா, டேண்டாங் சாயாங் நடனத்தோடு கூடிய கவிதை ஆகியவற்றிற்கான பாரம்பரிய அங்கீகாரத்திற்கான விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் நஸ்ரி தெரிவித்துள்ளார்.

Powered by: isentia